# ஜனாதிபதித் தேர்தலில் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியே முன்னிலை வகிக்கும்!



## ஆளும் கட்சியின் எஸ்.பி.திஸாநாயக்க எம்.பி. தெரிவிப்பு

நடைபெறக்கூடிய எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி (சமகி ஜன பலவேகய) கட்சியே முன்னிலையை வகிக்கும், என ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

அதன்படி, சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி தற்போதைக்கு கிட்டத்தட்ட 40 வீத வாக்குகளைப் பெற்று முன்னணியில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பொதுஜன பெரமுன (மொட்டு) கட்சி 35 வீத வாக்குகளை பெற்று இரண்டாவது இடத்தையும், ஜே.வி.பி யின் தேசிய மக்கள் சக்தி 15 வீத வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தையும் பெறக்கூடும்எனவும்தெரிவித்துள்ளதிஸாநாயக்கஎம்.பி., எவ்வாறாயினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் 5 வீதத்துக்கும் குறைவான வாக்குகளையே பெறும் எனவும் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ரெம-55)


மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 05 திங்கட்கிழமை 18.03.2024 கதிர் 204



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

யாழ் முற்றம்

Yarl Muttram

Youtube Channel




## பாதாளக் குழுக்களைத் தேடி அழிக்கும் நடவடிக்கை இன்று முதல் ஆரம்பமாம்!



அப்பாவி மக்களை கொலை செய்து நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று வரும் பாதாள உலகக் குழுக்களை அழிக்கும் வகையில், பொலிஸ் மா அதிபர் மற்றும் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியின் நேரடிக் கண்காணிப்பின் கீழ், மேல் மற்றும் தென் மாகாணங்களை மையமாகக் கொண்ட பாரிய நடவடிக்கை இன்று முதல் (18) ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேசங்களில் செயற்படும் பாதாள உலகக் 2➤

## மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உத்தர உற்சவம



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் - மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்தில் பங்குனித் திங்கள் உத்தர உற்சவம் நடைபெற்றது.

இதன்போது பக்தர்கள் ஆலய கேணியில் நீராடிவிட்டு, அம்மனுக்கு பொங்கல் பூசை செய்து வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இந்த உற்சவத்தில்கலந்துகொள்வதற்காக பல்வேறு பகுதிகளிலும் இருந்து வருகை தந்த பக்தர்கள் அம்பாளை தரிசித்து சென்றனர். (01)

## யாழில் திகதி காலாவதியான பொருட்கள் சிக்கின நிறுவன உரிமையாளருக்கு 180,000 ரூபா தண்டம்



திருநெல்வேலி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையில் பொதுச் சுகாதாரப் பயிலுனர்கள் கோபிறாஜ், லிங்கேஸ், சஜீவன், றொய்ஸ்ரன் ஆகியோர் இணைந்து திருநெல்வேலிப் பகுதியில் அமைந்துள்ள பல்பொருள் விற்பனை நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது திகதி காலாவதியான பொருட்கள், வண்டு மொய்த்துப் பழுதடைந்த பொருட்கள் மற்றும் உரிய சுட்டுத்துண்டு இடப்படாத பொருட்கள் என்பன இரு பல்பொருள் விற்பனை நிலையங்களில் கைப்பற்றப்பட்டன.

குறித்த நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு எதிராக இன்றையதினம் மேலதிக நீதவான் நீதிமன்றில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்சீவனால் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. இன்றையதினமே அவை விசாரணைக்கு எடுத்துக் 2➤

## சந்திரிகாவின் உறுதியான பதில் இல்லாததால் கூட்டணி அமைத்தல் பணிகள் தடைப்பட்டுள்ளன

### சுதந்திரக் கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் அமைக்கப்படவுள்ள புதிய கூட்டணிக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமை ஏற்பதற்கான உறுதியான பதிலை தெரிவிக்காததன் காரணமாக மேற்படி கூட்டணியை கட்டியெழுப்பும் நடவடிக்கைகள் தடைப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய கூட்டணியை அமைக்க ஐந்து அரசியல் கட்சிகள் விருப்பம் தெரிவித்துள்ளதுடன், பொதுஜன முன்னணியின் கதிரை சின்னத்தின் கீழ் புதிய கூட்டணியை அமைப்பதுடன் கட்சிக்கான அரசியலமைப்பு, அதிகாரங்கள் மற்றும் தலைமைத்துவ சபையை உருவாக்குதல் ஆகிய விடயங்களில் அங்கத்துவ கட்சிகளின் வேண்டுகோளின்படி அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளன எனவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையிலேயே, புதிய 2➤

## வடமராட்சி கிழக்கில் மீனவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவரின் தெப்பம் மீது இனந்தெரியாத படகு மோதியதில் காணாமல்போன மீனவரின் சடலம் நேற்று மாலை கரையொதுங்கியுள்ளது.

மருதங்கேணியைச் சேர்ந்த முத்துச்சாமி தவராசா (வயது 61) என்பவர் 3 நாட்களுக்கு முன்னர் தெப்பத்தில் சென்று மீன்பிடியில் ஈடுபட்டிருந்தார். இதன்போது இனந்தெரியாத படகு ஒன்று தெப்பத்தை மோதியது என்று தெரிவிக்கப்பட்டது. இதில் 2➤

## வறட்சியான காலநிலை காரணமாக அதிகமானோர் நோயெதிர்ப்பு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர்

### ஆயுர்வேத மருத்துவர் பேராசிரியர் கே.ஆர். அல்விஸ்

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக பெரும்பாலானோர் நோயெதிர்ப்பு குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளதாக பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர் பேராசிரியர் கே.ஆர். அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிலைமையினால் அடிக்கடி உடல் சோர்வு, உடல் வலி, தலைவலி, உடல் சீவனற்ற தன்மை போன்ற உணர்வுகள் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். குறிப்பாக சிறு பிள்ளைகள் மற்றும் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த நிலைக்கு எளிதில் ஆளாகின்றனர் எனவும் இந்நிலையை தவிர்ப்பதற்கு நீர்த் தன்மை நிறைந்த சத்துள்ள உணவு வகைகளான வெள்ளரி, புடலங்காய், கீரை வகைகள், கஞ்சி, தர்பூசணி , வில்வம் பழம், வாழைப்பழம், பப்பாசி, வாழைப்பழம் போன்ற சத்துள்ள உணவுகளையும் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் மருத்துவர் குறிப்பிட்டுள்ளார். 2➤

# செட்டிகுளம் பகுதியில் வீதியால் சென்றவர் யானை தாக்கி மரணம்

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வீதியால் சென்றவரை யானை தாக்கியதில் ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று செட்டிகுளம் பொலிஸார் இன்று (தெரிவித்தனர்.

செட்டிகுளம், மருதமடுப் பகுதியில் நேற்று மாலை வீதியால் பயணித்த முதியவரை அப் பகுதிக்கு வந்த யானை தாக்கியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்த மேற்படி முதியவர் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சேர்க்கப்பட்டபோதும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்துள்ளார்.

செட்டிகுளம், மருதமடுப் பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய தனபாலகே அனுர தென்னக்கோன் என்பவரே மரணமடைந்தவராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலி



ஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# வெடுக்குநாறியில் கைதானவர்களை விடுவிக்கக் கோரி நாளை போராட்டம்

தமிழர் தாயகத்தில் தொல்லியல் என்ற போர்வையிலான பண்பாட்டு அழிப்பையும் சிங்கள - பௌத்தமயமாக்கலையும் உடன் நிறுத்துமாறு கோரியும், வெடுக்குநாறிமலை ஆலயத்தில் நெடுங்கேணிப் பொலிஸாரால் திட்டமிட்டுக் கைது செய்யப்பட்டவர்களை உடன் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தியும் நாளை யாழ்ப்பாணத்தில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்றலில், மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

# வவுனியாவில் கிணற்றில் தவறி விழுந்து யுவதி பலி



வவுனியா, சமனங்குளம் பகுதியில் தோட்டக் கிணற்றில் தவறி விழுந்து இளம் யுவதி ஒருவர் மரணமடைந்துள்ளார் என்று சிதம்பரபுரம் பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

மேற்படி இளம் யுவதி நேற்று மாலை கிணற்று மோட்டரைப் போட்டபோது அதன் குழாய் கழன்றமையால் அதனைப் பூட்ட முயற்சித்தபோது கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளார்.

தொடர்ந்து மோட்டர் இயங்கிக் கொண்டிருப்பதை அவதானித்த அயல் வீட்டார் கிணற்றடிக்குச் சென்று பார்த்தபோது மேற்படி இளம் யுவதி கிணற்றில் விழுந்து இருந்ததை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் யுவதியை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் சேர்த்தபோது அவர் மரணமடைந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெர்வித்துள்ளனர்.

சம்பவத்தில் வவுனியா, சமனங்குளம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய தவரூபன் லக்சிகா என்ற யுவதியே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

### சுழிபுரத்தில் விளையாட்டுப் போட்டியில்

# ஐஸ் கிறீம் விற்றவருக்கு 42 ஆயிரம் ரூபா தண்டம்

*பாடசாலை இல்ல மெய்வல்லுனர் போட்டியின்போது சுகாதாரச்சீர்கேட்டுடன் ஐஸ் கிறீம் விற்பனை செய்த நிறுவனத்தின் உரிமையாளருக்கு 42 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.*

*யாழ்ப்பாணம், சுழிபுரம் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் விளையாட்டுப் போட்டியின்போது சுகாதாரச்சீர்கேட்டுடன் ஐஸ் கிறீம் விற்பனையில் ஈடுபட்டமை தொடர்பில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் 7 குற்றச்சாட்டுக்களை முன்வைத்து உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது.*

*வழக்கு விசாரணைகளின்போது உரிமையாளர் குற்றங்களை ஏற்றுக்கொண்டதை அடுத்து உரிமையாளரைக் கடுமையாக எச்சரித்த மன்று, 42 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. (அ)*

# உணவு கையாள்வோருக்கான மருத்துவப் பரிசோதனை

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதியில் உணவு கையாள்வோருக்கான மருத்துவப் பரிசோதனையும் நெருப்புக் காய்ச்சல் தடுப்பு மருந்தேற்றலும் அண்மையில் இடம்பெற்றது.

அதன் போது 95 உணவு கையாள்வோர் பரிசோதிக்கப்பட்டனர்.

அதேவேளை உணவு கையாள்வதில் இருந்து, உணவு வழங்கும் வரையிலான சுகாதாரம் சார் செயற்பாடுகள் தொடர்பிலும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. (01)

## சவடமராட்சி கிழக்கில்.....

தெப்பம் கரையொதுங்கியிருந்த நிலையில் மீனவர் காணாமல்போயிருந்தார்.

காணாமல்போன மீனவரைத் தேடும் பணியில் அப்பகுதி மக்களும் கடற்படை சுழியோடிகளும் ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில், நேற்று மாலை சடலம் மருதங்கேணி கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

சடலத்தை கிளிநொச்சி நீதிமன்ற நீதிவான் ஜெமில் நேரில் சென்று பார்வையிட்டார்.

சடலத்தின் முகத்தில் காயங்கள் காணப்படுவதால் தடயவியல் பொலிஸாரை அழைத்து தடயங்கள் பெறப்பட்ட பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளுமாறு நீதிவான் உத்தரவிட்டார்இது தொடர்பில் மருதங்கேணிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

## வறட்சியான காலநிலை...

ரவை, பயறு, சவ்வரிசி, பார்லி ஆகியவற்றில் தயாரிக்கப்படும் கஞ்சி வகைகளை உண்பதன் மூலம் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிப்பதுடன், எலுமிச்சை, தோடம்பழம் ஆகியனவற்றில் தயாரிக்கப்பட்ட பானங்களை அருந்துவதன் மூலம், உடலுக்கு தேவையான விட்டமின் 'சி' யை எளிதில் பெற முடியும் எனவும், இது நோயெதிர்ப்பு மண்டலத்தின் செயல்பாட்டை அதிகரிக்கும் எனவும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

குளிரூட்டிய நீர் மற்றும் குளிரூட்டிய பானங்களை அருந்துவது தீங்கு விளைவிக்கக் கூடியது எனவும், அது தாகத்தை தற்காலிகமாக அடக்கினாலும் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை பலவீனப்படுத்தும் எனவும் அல்விஸ் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரம-57)

## பாதாளக் குழுக்களைத்...

குழுக்களை அழிப்பதற்காக பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் விசேட அதிரடிப்படைத் தளபதி வருண ஜயசுந்தர ஆகியோரின் மேற்பார்வையில் 20 ஆயுதமேந்திய தாக்குதல் பொலிஸ் படையணிகள் அந்தப் பகுதிகளுக்கு அனுப்பப்படவுள்ளன.

இந்த தாக்குதல் படையினர் பொலிஸ் மா அதிபர் மற்றும் விசேட அதிரடிப்படைத் தளபதியின் உத்தரவின் பேரில் மட்டுமே செயற்படுவதுடன், இனங்காணப்பட்ட பாதாள உலகக் குழுக்கள் மற்றும் பாதாள உலக உறுப்பினர்களை அழிப்பதற்காக முழு நேரமாகச் செயற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதாள உலக குழுக்களின செயற்பாடுகள் பாரியளவில் அதிகரித்திருப்பதற்கு காரணம், குற்றச் செயல்கள் இடம் பெறும் பிரதேசங்களிலுள்ள சில பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் பாதாள உலகக் குழுக்களுக்கு அஞ்சுவதும் வேறு சிலர் பாதாள உலகக் குழுக்களுடன் தனிப்பட்ட தொடர்புகளை பேணுவதும்தான் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இதன்படி, பாதாள உலகக் குழுக்களை கட்டுப்படுத்தத் தவறிய 62 பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு எதிராக பொலிஸ் மா அதிபர் சிவப்பு எச்சரிக்கை அறிவித்தல் விடுத்துள்ளார். குறித்த 62 பொறுப்பதிகாரிகளையும் கொழும்புக்கு வரவழைத்த பொலிஸ் மா அதிபர் அவர்களை கடுமையாக எச்சரித்துள்ளதாக அறியவருகின்றது.

தொடர்ந்தும் இப்பிரதேசங்களில் பாதாள உலகக் குற்றச் செயல்கள் இடம்பெறும் பட்சத்தில் நிலைய பொறுப்பதிகாரிகள் பதவியிலிருந்து அவர்கள் நீக்கப்பட்டு சாதாரண கடமைகளுக்கு நியமிக்கப்படுவார்கள் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளனர். (ரம-57)

## சந்திரிகாவின் உறுதியான....

கூட்டணியின் தலைமைத்துவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ஆரம்பத்தில் சம்மதம் தெரிவித்திருந்த போதிலும், அது தொடர்பில் இதுவரை உறுதியான ஒரு முடிவினை அவர் தெரிவிக்கவில்லை என சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரம-56)

## யாழில் திகதி .....

கொள்ளப்பட்டன.

ஒருவர் விசாரணைக்கு வருகைதராத நிலையில், மற்றையவரிற்கு எதிராக 18 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, தண்டப்பணமாக 180,000 ரூபா அறவிடப்பட்டது. அத்துடன் கடுமையான எச்சரிக்கையும் அவருக்கு வழங்கப்பட்டது. (01)

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# "மரகதம்" வரலாற்று நூல் வெளியீட்டு விழா



(காரைதீவுச் செய்தியாளர்)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் "மரகதம்" வரலாற்று நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (16) சனிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பரிபாலன சபையின் ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா தொகுத்து எழுதிய இந்நூல் வெளியீட்டு விழா ஆலய சந்நிதானத்தில் ஆலய தலைவர் கலாநிதி கி.ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது.

ஆன்மீக அதிதியாக இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், பிரதம அதிதியாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ. கோபாலரெத்தினம் கலந்து சிறப்பித்தனர்.

ஆசியுரையை ஆலய பிரதம குரு ஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் வழங்கினார். வெளியிட்டுரையை நூலாசிரியர் வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்தினார். முதல் பிரதியை ஆலய தலைவர் கி.ஜெயசிறில் சுவாமி நீலமாதவானந்தா ஜீக்கு வழங்கி வைத்தார். ஏனைய பிரதிகள் அனைவருக்கும் வழங்கப்பட்டன .

நூலுக்கு அனுசரணை வழங்கிய லண்டனில் வாழும் காரைதீவைச் சேர்ந்த ரி.விஜயலதா ரி.விஜயகரன் சார்பில் அவரது சகோதரர் சி.பிரேமச்சந்திரன் சிறப்பு பிரதியை பெற்றுக் கொண்டார்.

நிகழ்வின் சிறப்பம்சமாக வெளியீடு விழா அடையாளமாக மீனாட்சி அம்மனின் அழகான பெறுமதியான திருவுருவப்படங்கள் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், கலாநிதி மூ.கோபாலரெத்தினம் மட்டக்களப்பு ஆசிரிய தம்பதியினர் சுகுணமதிஅருள்ராஜா, முதலைக்குடா ஆசிரியை திருமதி நளினி அகிலேஸ்வரன், அதிபர்களான பி.தயாநிதி (வீரமுனை), செ.சிவயோகராஜா (காரைதீவு) ஆகியோருக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அதேவேளை, 550 வருடகால வரலாற்று பாரம்பரியத்துடன் கூடிய மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கான முதல் வரலாற்று நூலான "மரகதம்" நூல் வெளியீட்டு விழாவிற்கு முன்னதாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், ஜனாதிபதி செயலணியின் கிழக்கு மாகாண இணைப்பாளர் கணபதிப்பிள்ளை மோகன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.



# அட்டாளைச்சேனையில் மகளிர் தின நிகழ்வு




(எம்.எப். நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் அண்மையில் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றன.

பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமை யாளர் ஏ எம். ஹமிட் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முசாபிர் கலந்து கொண்டு மகளிர் தினம் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தார்.

பெண்களில் முதலீடு செய்க, முன்னேற்றத்தை விரைவு படுத்துக எனும் கருப்பொருளுடன் நிகழ்வில் கலந்து கொண்ட வளவாளர்களால் விழிப்பூட்டல்கள் வழங்கப்பட்டன.

இடம்பெற்ற நிகழ்வுகளில் சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்கள், மகளிர் அமைப்புக்கள், பெண்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கருத்துச் சுதந்திரம் - தகவல் உரிமை அம்பாறையில் செயலமர்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பொதுநலவாய அறக்கட்டளையின் நிதியுதவியுடன் கருத்துச் சுதந்திரம் மற்றும் தகவல் உரிமைகளை மேம்படுத்துவதற்கான புதுமையான இடங்களின் ஒரு பகுதியாக,



இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றம் ஏற்பாடு செய்திருந்த அரச பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான செயலமர்வில் அம்பாறை தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மக்கள் தொடர்பாடல் அதிகாரிகள் மற்றும் தகவல்துறை அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர்.

அமர்வை அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம ஆரம்பித்து வைத்த இந்த அமர்வில் அம்பாறை மாவட்ட மேலதிக செயலாளர் வி.ஜெகதீசன், விடியல் இணையத்தள பொறுப்பாளரும் வளவாளருமான றிப்தி அலி உற்பட பலரும் கலந்து கொண்டனர்.

# அக்கரைப்பற்று அல் பாதிமியா வித்தியாலய மின்னும் தாரகைகள் விருது விழா



(எம்.ஏ.ஏ.அக்தார்)

மேற்படி கல்லூரியின் பரிசளிப்பு விழா அதிபர் எம், ஸமீம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள், இறுதித் தவணையில் தரம் - 3,4,5 வகுப்புக்களைச் சேர்ந்த அதிகூடிய முதல் 5ம் இடம் வரை பெற்ற மாணவர்கள், மாணவ தலைவர்கள், ஆளுமை விருத்திச்செயலமர்வில் பங்குபற்றிய மாணவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

பிரதம அதிதியாக, தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம் அதாஉல்லா (நா.உ) விசேட அதிதிகளாக அக்கரைப்பற்று வலயக்கல்வி பனிமனையின் அதிகாரிகள், பாடசாலைகளின் அதிபர்கள், ஓய்வு பெற்ற அதிபர்கள், நலன் விரும்பிகள், பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்று குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# பாஜகவால் சீரழிக்கப்பட்ட இந்தியாவை மீட்பதற்கான பயணம் இது! இந்திய ஒற்றுமை நீதி நடைப்பயண நிறைவு விழாவில் மு.க.ஸ்டாலின்

பாஜகவைவிட இந்தியாவுக்கு பெரிய ஆபத்து வேறு இல்லை என முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்திய ஒற்றுமை நீதி நடைப்பயண நிறைவு விழாவில் அவர் உரையாற்றியபோது இவ்வாறு குறிப்பிட்டார்.

அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி எங்கு சென்றாலும் பெரும் திருவிழாவைப் போல அந்த இடம் காட்சியளிக்கிறது. அப்படியொரு வரவேற்பையும் அன்பையும் மக்கள் அவர் மீது பொழிகின்றனர்.

இந்திய ஒற்றுமை நீதிப் பயணத்தின் இடையே அவர் பல இடர்களை பாஜக அரசின் மூலம் எதிர்கொண்டார். அவரது பயணத்துக்கு அனுமதி மறுக்க என்னென்னவோ காரணங்களைச் சொல்லிப் பார்த்தார்கள். தடைகளை மீறி ராகுல் காந்தி தனது பயணத்தைத் தொடர்ந்தார். ராகுல் காந்திக்கு கூடிய மக்கள் வெள்ளம், பாஜகவை தூக்கமிழக்கச் செய்தது. அவரது மக்களவை உறுப்பினர் பதவியைப் பறித்தார்கள். ஆனால், அவர் உச்சநீதிமன்றம் வரை சென்று வென்றார். மீண்டும் மக்களவையில் நுழைந்து முழங்கினார்.

இந்திய ஒற்றுமை நீதி நடைப்பயணம் எனும் பயணம் ராகுல் காந்தி என்ற தனிமனிதரின் பயணமல்ல. இது இந்தியாவுக்கான பயணம். இந்தியாவுக்கு இப்போது தேவை ஒற்றுமைதான். மக்களைப் பிளவுபடுத்தும் பாஜக விரைவில் வீட்டுக்கு அனுப்பப்படும். கடந்த பத்து ஆண்டுகளில் பிரதமர் மோடி செய்தது இரண்டே இரண்டுதான். ஒன்று வெளிநாட்டுப் பயணங்கள். மற்றொன்று பொய்ப் பிரசாரம். பாஜகவை நாம் இப்போதே நிறுத்தியாக வேண்டும். அதுதான் நம் இலக்கு.

'இந்தியா' கூட்டணியை நாம் உருவாக்கிய நாளில் இருந்து, இந்தியா என்ற சொல்லையே பாஜக தவிர்க்கத் தொடங்கிவிட்டது. அந்த அளவுக்கு அச்சத்தில் இருக்கிறார்கள். அதனால்தான் பிரதமர் மோடி நமது கூட்டணி குறித்து அவதூறு செய்து வருகிறார். 'இந்தியா' கூட்டணி ஊழல் கூட்டணி என்கிறார். ஆனால், ஊழலில் ஊறிய கட்சி பாஜகதான். இதை தேர்தல் பத்திர ஊழல் அம்பலப்படுத்திவிட்டது. இது பாஜகவின் நவீன ஊழல். தனது தோல்விகளையும் ஊழல்களையும் திசைதிருப்பவே நம் மீது மோடி குற்றம்சாட்டுகிறார்.



நாம் மக்களுக்கு நன்மை செய்ய அரசியலுக்கு வந்தவர்கள். கேளிக்கைக்காக இல்லை. இந்தியாவின் உணர்வுகளைப் புரிந்துகொள்ள நாட்டின் ஒவ்வொரு மாநிலத்துக்கும் ராகுல் காந்தி பயணித்திருக்கிறார். பாஜகவால் சீரழிக்கப்பட்ட நம் இந்தியாவை மீட்பதற்கான பயணம் இது. பாஜகவைவிட பெரிய ஆபத்து இந்தியாவுக்கு வேறு இல்லை. அவர்களிடம் இருந்து இந்தியாவைக் காப்பாற்ற நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும், என்றார் அவர். (04)

# ரஷ்ய அதிபர் தேர்தலில் புடின் மீண்டும் வெற்றி! ஐந்தாவது முறையாகப் பதவியேற்கவிருக்கிறார்



ரஷ்ய அதிபராக புடின் ஐந்தாவது முறையாகப் பதவியேற்கவுள்ளார். இதன்மூலம் ஏற்கெனவே 24 ஆண்டுகள் அதிபராக இருந்த அவர், பிரதான எதிர்க்கட்சிகளே இல்லாத சூழலில் மேலும் 6 ஆண்டுகள் தனியரசாட்சியை தொடரவுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை, ரஷ்யாவில் அதிபர் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நடைபெற்றது. அந்நாட்டு அதிபர் புடினுக்கு எதிராகவோ, உக்ரைன் மீதான அவரின் போர் தொடர்பாகவோ பொதுவெளியில் விமர்சிக்க அனுமதிக்கப்படாமல், மிகுந்த கட்டுப்பாடான சூழலில் தேர்தல் நடைபெற்றது.

புடினை தீவிரமாக எதிர்த்து வந்த முக்கிய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி, கடந்த மாதம் அந்நாட்டுச் சிறையில் உயிரிழந்தார். இதேபோல புடினின் பிற எதிர்ப்பாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர் அல்லது நாடு கடத்தப்பட்டனர். இதனால் பிரதான எதிர்க்கட்சிகளோ, எதிர்ப்பாளர்களோ தேர்தல் போட்டியில் இல்லாத சூழலில், நேரடியாகவும் இணைய வழியிலும் வாக்குப் பதிவு நடைபெற்றது.

இந்தத் தேர்தல் உக்ரைனிடம் இருந்து வலுக்கட்டாயமாகப் பிரித்து ரஷ்யாவுடன் சேர்த்துக் கொள்ளப்பட்ட பகுதிகளிலும் நடத்தப்பட்டது. பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலும் ரஷ்யாவின் பல வாக்குச்சாவடிகளில் வன்முறை நிகழ்ந்தது. அங்குள்ள செயின்ட் பீட்டஸ்பர்க் நகரில் வாக்குச்சாவடி ஒன்றின் நுழைவாயிலில் தீக்குண்டு வீசிய பெண் கைது செய்யப்பட்டார். இதுமட்டுமின்றி நாட்டின் பல்வேறு பகுதிகளில் வாக்குப் பெட்டிகளுக்குள் கிருமி நாசினி, மை ஆகியவற்றை எறிந்து அத்துமீறலில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டனர்.

ரஷ்யாவின் 16 நகரங்களில் 65க்கும் மேற்பட்டவர்கள் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டதாக ஓவிடி-இன்போ என்ற மனித உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

வாக்குச்சாவடிகளில் அத்துமீறலில் ஈடுபட்டு வாக்குப் பதிவைச் சீர்குலைக்க முயற்சித்தவர்கள் தேசத் துரோக குற்றச்சாட்டில் தண்டிக்கப்பட வேண்டும் என்று புதின் தலைமையிலான ரஷ்ய பாதுகாப்பு கவுன்சிலின் துணைத் தலைவர் டிமித்ரி மெட்வடேவ் தெரிவித்தார்.

புடின் மற்றும் அவரின் உக்ரைன் போர் மீது அதிருப்தி கொண்டவர்கள், வாக்குச்சாவடிகளில் ஞாயிற்றுக்கிழமை திரண்டு போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என்று அலெக்ஸி நவால்னியின் ஆதரவாளர்கள் வலியுறுத்தினர். தனது மரணத்துக்கு முன்பு, இந்த உத்திக்கு நவால்னி ஆதரவளித்திருந்தார்.

இந்நிலையில், வாக்குச்சாவடிகளில் திரண்ட மக்களின் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை நவால்னியின் ஆதரவாளர்கள் சமூக ஊடகத்தில் வெளியிட்டனர். அந்தப் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை சில ரஷ்ய ஊடகங்களும் வெளியிட்டன. ஆனால், அவ்வாறு திரண்ட மக்கள் வாக்களிக்கத் திரண்டார்களா அல்லது போராட்டத்துக்கு விடுத்த அழைப்பை ஏற்று திரண்டார்களா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை, என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அதிபர் புடினுக்கு எதிராக ஜெர்மனி தலைநகர் பெர்லின், பிரான்ஸ் தலைநகர் பாரீஸ், இத்தாலியின் மிலான் நகரம் உள்பட பல்வேறு நகரங்களில் உள்ள ரஷ்ய தூதரகங்களுக்கு எதிரே ரஷ்யர்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பெர்லினில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அலெக்ஸி நவால்னியின் மனைவி யூலியா நவால்நயா பங்கேற்றிருந்தார். (04)

# இந்தியாவின் மகளிர் பிரீமியர் லீக் தொடர் பெங்களூரு அணி கிண்ணத்தை வென்றது!



*இந்தியாவின் மகளிர் பிரீமியர் லீக் தொடரில் ஆர்சிபி மகளிர் அணி தங்களுடைய இரண்டாவது சீசனிலே இறுதிப் போட்டிக்குச் சென்று தற்போது வெற்றிக் கிண்ணத்தையும் கைப்பற்றி இருக்கிறது.*

*டெல்லி அருண் ஜெட்லி மைதானத்தில் இந்த இறுதிப் போட்டி நடைபெற்றது. இதில் தொடர்ந்து இரண்டாவது முறையாக டெல்லி கப்பிடல் அணி இறுதிப் போட்டியில் விளையாடியது.*

*போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி அணி கப்டன் மெக் லென்னிங் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். பெங்களூரு அணியின் சிறப்பான பந்துவீச்சில் டெல்லி அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து 18.3 ஓவரில் 113 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. சிறப்பாக பந்து வீசிய ஆர் சி பி வீராங்கனை ஸ்ரேயங்கா பட்டேல் நான்கு விக்கெட்டுகளையும் சோபி மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.*

*இதனை அடுத்து 114 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆர் சி பி அணி களம் இறங்கியது. கப்டன் ஸ்ருதி மந்தானா மற்றும் சோபி டிவைன் ஆகியோர் அபாரமாக விளையாடி ஓட்டங்களைச் சேர்த்தனர். முதல் விக்கெட்டுக்கு இந்த சோடி 49 ஓட்டங்கள் சேர்த்தது.*

*அதிரடியாக விளையாடிய சோபி டிவைன் 27 பந்துகளில் 32 ஓட்டங்களையும், ஸ்மிருதி மந்தனா பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 39 பந்துகளில் 31 ஓட்டங்களையும் எடுத்தனர். பெங்களூரு அணி 82 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்களை இழந்தது.*

*இதனை அடுத்து எலைஸ் பெர்ரி மற்றும் ரிச்சி கோஸ் இணை கடைசி வரை களத்தில் நின்று அணியின் வெற்றியை உறுதி செய்தது. இதன் மூலம் முதல் முறையாக மகளிர் பிரீமியர் லீக் தொடரை ஆர்சிபி அணி வென்றிருக்கிறது. (04)*

# அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் துப்பாக்கிச்சூடு 2 பேர் உயிரிழந்து 5 பேர் காயமடைந்துள்ளதாக தகவல்

அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் அடையாளம் தெரியாத நபரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் உயிரிழந்து, 5 பேர் காயமடைந்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 3 மணியளவில் இந்தத் துப்பாக்கிச்சூடு சம்பவம் நடந்துள்ளது. இதில் காயமடைந்தவர்கள் உள்ளூரில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிச்சூடு நடத்திய நபரை தேடும் பணியில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

துப்பாக்கிச்சூடு நடைபெற்ற சூழல் குறித்தோ காயமடைந்தவர்களின் உடல்நிலை குறித்தோ பொலிஸார் உடனடித் தகவல்களை வெளியிடவில்லை.

கொலம்பியா மாவட்டத்தில் கடந்த ஆண்டில் வன்முறைச் சம்பவங்கள் 39 சதவீதம் அதிகரித்துள்ளன. எனவே, துப்பாக்கிச்சூட்டில் ஈடுபடும் குற்றவாளிகளுக்குக் கடும் தண்டனை வழங்குவதற்கான சட்டங்களை இயற்றுமாறு அரசிடம் காவல் துறையினர் கோரிக்கை முன்வைத்து வருகின்றனர்.

(04)

# மடத்தடியில் மீனாட்சியம்மன் ஆலய மகா சங்காபிஷேகம்

(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மகா சங்காபிஷேக நிகழ்வு நேற்று முன்தினம் (16) சனிக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

108 சங்காபிஷேக நிகழ்வு ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் ஆலயகுரு சிவசிறி ஹேரவர்த்தன சர்மா தலைமையிலான சிவாச்சாரியார்கள் முன்னிலையில் காலை 9 மணி முதல் சங்காபிஷேக கிரியைகள் நடைபெற்றன.

ஆலய பரிபாலன சபையின் தலைவர் கி.ஜெயசிறில், இராமகிருஷ்ண மிஷன் மட்டக்களப்பு ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், ஜனாதிபதி செயலணியின் கிழக்கு மாகாண இணைப்பாளர் கணபதிப்பிள்ளை மோகன், வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி எம். கோபாலரெத்தினம், ஆலய பரிபாலன சபை ஆலோசகர் உதவிக் கல்விப் பணிப்பாளர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.



# சாய்ந்தமருது பிர்லியன்ட் கல்லூரியின் மாணவர் சீருடை - அடையாள அட்டை

(ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிர்லியன்ட் கல்லூரியின் மாணவர் சீருடை மற்றும் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு கடந்த சினியன்று (16) சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண முன்பள்ளி பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு இயங்கிவரும் இம்முன்பள்ளி, தமது 10 ஆண்டு நிறைவையொட்டி வெளியிடும் புதிய சீருடை மற்றும் மாணவர் அடையாள அட்டைகள் 183 மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் தாய் சேய் நலன் பேணல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.றிஸ்பின் கௌரவ அதிதியாவும் கலந்து கொண்டார்.

சாய்ந்தமருது மக்கள் வங்கி உதவி முகாமையாளர் ஏ.ஆர்.றிஸ்வான் முகம்மட், கல்முனை பிரதேச செயலக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.ஆயிஷா மற்றும் கல்முனை மெற்றோபொலிட்டன் கல்லூரியின் கணக்காளர் எஸ்.லியாக்கத் அலி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.



இதன்போது, "சிறுவர் உளவியல்" எனும் தலைப்பில் டொக்டர் ஐ.எல். எம்.றிபாஸ் மற்றும் "சிறுவர் போசாக்கு" தலைப்பில் டொக்டர் எம்.எச். றிஸ்பின், "முன்பள்ளி கல்வியில் பெற்றோரின் வகிபாகம்" தலைப்பில் ஏ.எம். ஆயிஷா, "சேமிப்பின் முக்கியத்துவம்" தலைப்பில் ஏ.ஆர். றிஸ்வான் முகம்மட் ஆகியோரால் பெற்றோருக்கான விழிப்புணர்வு உரைகளும் இடம்பெற்றன.

# திருகோணமலையில் மகளிர் தின சிறப்பு கலை, இலக்கிய நிகழ்வு



(ஹஸ்பர் ஏ.எச் )

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலகம் மற்றும் பொது நூலகத்தின் வாசகர் வட்டம் இணைந்த ஏற்பாட்டில் மாதாந்த கலை, இலக்கிய நிகழ்வின் வரிசையில் மகளிர் தின சிறப்பு கலை, இலக்கிய நிகழ்வு ஜமாலியா சனசமூக நிலையத்தின் அனுசரணையில் சனிக்கிழமை (16) திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் வாசகர் வட்டத்தின் தலைவர் சரவண. திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு, பிரதம விருந்தினராக திருகோணமலை நகராட்சி மன்றத்தின் செயலாளர் வெ. இராஜசேகர், சிறப்பு விருந்தினராக சனசமூக உத்தியோகத்தர் எஸ். முரளிதரன் கௌரவ விருந்தினர்களாக ஜமாலியா சனசமூக நிலையத்தின் தலைவர் என்.நூர் மொஹமட், செயலாளர் மு.மு.முஹமட் முக்தார் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில், திருகோணமலை நகராட்சி மன்றத்தின்



பெண் சுத்திகரிப்பு தொழிலாளிகள் சான்றிதழ் மற்றும் சிறப்பு பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

கவிஞர் கலாநிதி செ.ஞானராசா தலைமையில் இடம்பெற்ற கவியரங்கில், கவிஞர்களான கொட்டிய ஆரன், திருமதி ஜெயசிறி சிறிசெல்வம், டி.இரவிகாந்தன், செல்வி பாத்திமா தாஹிரா முஹம்மது சித்தீக் ஆகியோர் கலந்து கொண்டு 'நிகரென்று கொட்டு முரசு' என்ற தலைப்பில் கவிபாடியிருந்தனர்.

இந்நிகழ்வினை வாசகர் வட்டத்தின் ஆலோசகரும் நூலக உதவியாளருமான அ.அச்சுதன் தொகுத்து வழங்கியிருந்ததுடன், வரவேற்புரையை நூலகர் மு.லெ.றிம்சானா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் பிரதம நூலகர் ந. யோகேஸ்வரன் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.



# யாழ்ப்பாணத்தில் பொலிஸ்மா அதிபர்





பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும்போது சமுதாய பொலிஸ் குழுக்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும், என பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் சமுதாய பொலிஸ் குழுக்களுடன் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்டவர்கள் கலந்துரையாடும் நிகழ்வு நேற்று (17) நடைபெற்றது. இதன்போதே பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் இதனை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்காங்கேசன்துறை பொலிஸ்பிராந்தியத்தில் உள்ள 255 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் சமுதாய பொலிஸ் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கிராமத்தில் உள்ள வாக்காளர் பதிவேட்டில் உள்ள பெயர்களுக்கு மேலதிகமாக யார் யார் கிராமத்தில் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

குற்றச்செயல்களுடன்தொடர்புபட்டவர், போதைப்பொருள் வியாபரத்துடன்தொடர்புபட்டவர், தேடப்படும்குற்றவாளிகள், தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் கிராமங்களில் பதுங்கி இருக்கலாம். அவ்வாறானவர்களை பொலிஸார் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்களால் கண்டு பிடிப்பது சிரமம். ஆகவே அதன்போது சமுதாய பொலிஸ் குழுக்கள் பொலிஸாருக்கு உதவவேண்டும்.



30 வருட யுத்தம் காரணமாகவும் ஈஸ்டர் தாக்குதல் காரணமாகவும் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன. அவ்வாறான ஒரு விடயத்தை இனிமேல் ஏற்படுத்த அனுமதிக்க முடியாது.

தென்மாகாணத்தில் அண்மைக் காலமாக துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அவ்வாறான ஒன்றை வடக்கிலும் அனுமதிக்க முடியாது.

பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் இவற்றைக் கட்டுப்படுத்தும்போது சமுதாய பொலிஸ் குழுக்கள் ஒத்துழைப்பை வழங்கவேண்டும்.

யுக்திய நடவடிக்கை மூலம் போதைப்பொருள் குற்றவாளிகள் மற்றும் பாதாள உலக கோஷ்டியினர் பலரும் கைது செய்யப்பட்டதுடன் அவர்களின் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதற்கு வடக்கில் உள்ளவர்களும் தங்கள் ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

119 அவசர பொலிஸ் தொலைபேசி அழைப்பு சேவையில் மொழி ரீதியான சிக்கல்களை தமிழ் மக்கள் எதிர்கொண்டனர். அதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஜனாதிபதி மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் வழிகாட்டலுக்கமைய 107 என்கிற தமிழ் மொழில மூல அவசர பொலிஸ் தொலைபேசி அழைப்பு சேவை வவுனியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

குறித்த 107 என்ற இலக்கத்திற்கு நாட்டின் எப்பாகத்தில் இருந்தும் தமிழ் மொழி மூலமான முறைப்பாட்டை மேற்கொள்ளமுடியும் -என்றார்.






## ஒலுவில் ஜனாஸா நல்லடக்கக்குழு சீருடை வழங்கி வைக்கும் நிகழ்வு



(எம்.எம்.றம்ஸீன்)

ஒலுவில் பிரதேசத்தில் கடந்த ஆறு வருட காலமாக ஜனாஸாவுக்கான சேவைகளை வழங்கி வரும் ஜனாஸா நல்லடக்க குழுவிற்கான சீருடை ஒலுவில் 2001 க.பொ.த சா.தர வகுப்புக் குழுவினர் ஒலுவில் ஜ/ம்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்ற நிகழ்வில் வழங்கி வைத்தனர்.

இதன் போது 2001 சாதாரண தர மாணவர் அமைப்பின் சார்பில் அதன் தலைவர் எம்.ஏ. அஹமட் பாரிஸ் தலைமையிலான குழுவினர்களும் மற்றும் எப்.ஏ.எம். அத்ஹர் தலைமையிலான ஜனாஸா நல்லடக்க குழுவினர்களும் சமுகமளித்திருந்தனர்.

## யாழ். பல்கலைக்கழக பட்டிமன்ற விவகாரம் நிர்வாகத்திடமும் விசாரணைக்குப் பணிப்பு

இன நல்லிணக்கத்துக்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான பட்டிமன்றம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடத்தப்பட்டமை தொடர்பில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடமும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரிடம் கல்வி அமைச்சு கோரியுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் கடந்த டிசம்பர் மாதம் 10ஆம் திகதி நடைபெற்ற "தமிழ் வேள்வி - 2023" என்ற நிகழ்வில், "ஈழத் தமிழ் சமுதாயத்தில் தற்போது இளைஞர் அமைப்புக்களின் எழுச்சி அவசியமானதா? அவசியமற்றதா ?" எனும் தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெற்றிருந்தது. இதில் நடுவராகக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபரும் சொற்பொழிவாளருமான ச.லலீசன் கலந்துகொண்டிருந்தார்.

அதன்போது இளைஞர்களிடையே இன நல்லிணக்கத்தைக் குழப்பும் வகையில் தமிழ் இளைஞர்களை எழுச்சிகொள்ளத் தூண்டும் வகையில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன என்று கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் கல்வி அமைச்சு, பட்டிமன்ற நடுவரிடம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், குறித்த பட்டிமன்றம் யாழ். பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு எவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது என்பது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக நிர்வாகத்திடமும் விசாரணைகளை முன்னெடுக்குமாறும் கல்வி அமைச்சு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்குப் பணித்துள்ளது. (அ)

## கோப் குழுவிலிருந்து விலகினார் எரான்!



கோப் குழுவில் இருந்து விலகியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சபாநாயகரிடம் தனது ராஜினாமாக் கடிதத்தை கையளித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.03.2024 இல் வெளியிடப்பெற்றது.